நல்மானகற்பமதுநல்குவாரே. ககடு

தாடகசுனைமகத்துவம்.

நல்குவாரம்மலையிலுதகமுண்டு
நலமானதயிலமுண்டுபாஷாணமுண்டு
செல்குவார்மூலிகைதான்கோடியுண்டு
திரவியங்கள்கிடாரத்திலிருப்பதுண்டு
புல்குவார்தாடகையிற்கிழக்குராவில்
புதுமையொன்றுசொல்லுகிறேன்பிழைக்கும்பேர்க்
கொல்குவாரடையாளமுரைக்கக்கேளு (கு
வோராருக்குயர்வொருகையில் துறட்டிதானே.

தயிலமிருப்பிடம்-தயிலமெடுக்கும்விபரம்.

கையிலொருதுறட்டிதனைக்கண்டாயானால்
காணப்பாவதினருகேகல்லிற்பூண்டு
செயலோடுசித்தரையும்நாநளிற்றுன்
சென்றக்கால்தயிலமதுசிவந்துபாயும்
நயமாகவதினடுக்கக்கற்குழிதானென்று
நலமாகவுதிற்றயிலஞ்சென்றுபாயும்
மயமாகுந்தயிலஞ்சித்தர்கொடுபோமுன்னே
மைந்தனேகாத்திருந்தெடுத்துக்கொள்ளே, கசு

தயிலம்வைக்கப்பாத்திரம்-சயிலவுதகதயில மகத்துவம்.

கொள்ளுவதுபேச்சுனையின் குடுக்கைதன்னில்
கொள்ளமட்டுமெடத்ததனைக்கொண்டுபோய்நீ
விள்ளுகிறேன்காசினைதானுள்ளேகொள்ளு
மேன்மையாமண்டலத்தில்சாவுபோச்ச
தள்ளுவதுசட்டையதுயெல்லாந்தள்ளுஞ்
சயிலவுதகமென்றதயிலமப்பா
எள்ளளவுமிரும்பிலேல்தடவிப்போட
ஏமமென்றவித்தையதுகைக்குள்ளாச்சே. ௧௧அ

மயேந்திரமலைவளப்பம்-கருநெல்லியிடம் வாலரசமிருக்குமிடம்.

உள்ளானமயேந்திரமாமலைக்குத்தாழ
ஒருபிறமாம்வடபக்கந்தன்னிலேதான்
கல்லானகல்லிலேகுகைதானுண்டு
கருநெல்லியதனிலேயொருமரந்தானுண்டு
தள்ளாதகுகைதனிலேகற்பறணிநாலு
தயிலமுண்டுவுதகமுண்டுதேனுந்தானுண்டு
விள்ளாதவாலரசமொன்றதாகும்
மேலானபரிசனமாம்வேதையாமே. ௧௯௯

நம்பிமலைவளம்-சோதிவிருட்சம் செங்கற்றுறை.

ஆமென்றநம்பிமலைவடச்சார்புதன்னி
வதிதமாஞ்சோதியதுஆல்போனிற்கும்

வாமென்றவதினருகேசெங்கற்றாழை
வரிசையாய்நிற்குமடாயிரத்தவர்ணம்
போமென்றகாயசித்திக்கேத்தகற்பம்
புதுமையின்னஞ்சொல்லுகிறேன்பூண்டுகேளு
தாமென்றபொதிகைக்குக்கிழக்குச்சார்பில்
தாண்டியொருநாழிகைதான்மலையிற்சென்றால்.

சிவந்தவிலைக்கள்ளி-செந்திராய் - சுணங்கன்மூலி

சென்றிடவேயவ்விடத்தில்சுனைதானொன்று
சிவந்ததொருஇலைக்கள்ளிசெந்திராயுங்
கன்றிடவேயுண்டாகுஞ்சுணங்கன்மூலி
காயசித்திக்கேத்தகற்பங்கனக்கவுண்டு
பண்டுடையகற்பத்தைக்கண்டபேர்க்குப்
பரிவானகாயசித்திகெவுனசித்தி
யென்றுமேவாதசித்தியெய்துமெய்து
மிறைவனைப்போலெந்நாளுமிருந்துபாரே. கஉக

நரைதிரைமாறத்தைலம்.

இருத்துகின்றதயிலமொன்றுஇயம்பக்கேளாய்
இயலானகடுக்காய்வேர்த்தயிலம்நாழி
வருத்துகின்றநெல்லிக்காய்த்தயிலம்நாழி
வளமானதாணிக்காய்த்தயிலம்நாழி.

திருத்துகின்றகருந்துவரைத்தயிலம்நாழி
சேங்கொட்டைவித்தினுடதயிலம்நாழி
பொருந்துகின்றயழிஞ்சில்விதைத்தயிலம்நாழி
புகழானவேம்பின்மேற்றோல்தயிலம்நாழி. ௧உஉ

நாழியென்றசிவன்வேம்புத்தயிலம்நாழி
நலமானகாரெள்ளுத்தயிலம்நாழி
வாழியென்றவாலுளுவைத்தயிலம்நாழி
வளமானவகையெல்லாந்தயிலம்வாங்கி
தாழியென்றபீங்கானும்பாண்டத்துள்ளே
சாதகமாய்விட்டுமொருசேதிகேளு
காழியென்றதயிலமதிலோகங்காந்தம்
கருதியதோர்செந்தூரங்கலந்துகொள்ளே. ௧உ௩

மலையேறபக்குவம்-தயிலத்துக்குப்பத்தியம்.

கலந்ததனை நெல்லுக்குள்மண்டலந்தான்வைத்துக்
கணபதியைப்பூசித்துக்காசிடைதான்கொள்ளு
மலந்தகொருமண்டலந்தான்கொண்டாயானால்
வளர்கின்றநரைமாறிவண்டுபோலாம்
நலந்திகழுந்தேகமதுசிவந்துகாணும்
நாட்டுக்குளதிசமிதுநாட்டிப்பாரு
பலந்தருங்காணித்தயிலஞ்செய்துக்கொண்டு
பாரிகருமலைமேலேயேறுயேறே. ௧உ௪

ஏறுவதுயெப்படிதானென்றாயானால்
விடும்பென்றஆணுவமுமுனிவுந்தீர்ந்து

கூறுகின்றகொலைகளவுங்காமம்பொய்யுங்
கொடுமையென்றபாவங்கள்தன்னைத்தீர்ந்து
மாறுகின்றமனந்துரந்துநிராசையாகி
வளமாகப்பச்சரிசிபொங்கியேதான்
தேறலதுபால்கூட்டிச்சிறுபயறுங்கூட்டிச்
செயமாகவோர்வேளையமுதுபொள்ளே. ௧௨௫

வாசிகுறி.

கொள்ளயிலேயிடைகலையில்வாசிபாரு
கூசாமல்நெட்டோடேயேறுயேறு
தள்ளையென்றவாத்தானைநித்தம்பூசி
சாயுச்சியபதத்தைநித்தம்சார்ந்துநில்லு
வள்ளையிலேயிதுவெல்லாமகிழ்ந்துபாரு
மகத்தானபூரணமுமனதிற்றோன்றும்
பின்னையிலேவுங்களைப்போல்பிள்ளையுண்டோ
பேய்மக்காளலையாதேபிலத்துக்கோவே. ௧௨௬

பசுபதிபாசம்-புரியட்டம்.

கோவென்றபசுவொன்றுபதிதானொன்று
கூறுகெட்டபாசமொன்றுமூன்றுங்கூடித்
தேவனென்றபிறம்புக்குஇடமுண்டாச்சு
சித்தனென்றுலிதைத்தள்ளிசிவயோகஞ்சேரு
ஆவென்றவகையில்லையென்றுசொல்லி
யலையாதேயிந்நூலிலடுத்தசித்தி

பூவென்றஆயிரத்தெண்மலர்ப்பூவைத்தான்
போத்தியேதிமுட்டப்புரியட்டம்போமே. கஉஎ

பசியாதிருக்க.

போமென்றபுரியட்டமெட்டினலப்பா
போகாமலடங்கினல்பிறவிபோச்சு
சாவென்றசொல்லேதுலபிதானேது
சாயுச்சியமானதொருஞானவானே
யாமென்றவமுர்தமதுவுண்டாயாகு
லப்பனேபசிபோச்சுச்சித்தியாச்சு
நாமென்றவானுவுமும்போபோச்சு
நலமானசிவசித்தன்ஞானியாமே. கஉஅ

தேகவாசனை.

ஞானியென்றுவொருகலையில்காய்த்தமேதாசொல்
நரஜென்மங்கோடியிலேயொருவனப்பா
யோனிவாய்ப்பட்டசடமாகையாலே
யுத்தமனேகாயசித்தியாகவேணும்
ஊனெனன்றதேகமதுகற்பதேக
முத்தமனேகயிலாயதேகமானல்
மானிலத்தின்மனிதனல்லதேவனுச்சு
மைந்தனேபற்பமடாமனிதர்வாழ்வே. கஉகூ

பூநீற்றுக்குரு.

வாழவேயின்னமொருவரிசைகேளாய்
வளமானபூநீற்றைவாரிக்கொண்டு

தாளவேசாறுவராத்தனைழக்கெல்லாஞ்
சாதகமாய்ப்போட்டிடவேதண்ணீராகுஞ்
சூழவேகாரத்தைச்சிறுநீருப்பில்
தோய்த்திடவேகாரமதுசுண்ணமாகும்
கூழவேசோறுகளில்போட்டுச்சற்றே
குருவென்றகற்சுன்னத்துப்புச்சத்தே. ௬௩

பாஷாணக்கட்டு.

சத்தானசாறுவகைசொல்லக்கேளு
சம்பிரச்சாறுதான்படிதானென்று
வித்தானமுன்சொன்னகுருவகைதானென்று
விளங்கவேவகையொன்றுவராகனென்று
முத்தாசப்போட்டதனைக்கலக்கிவைத்தால்
முறிந்துமேயொருநாளில்தண்ணீராகும்
பத்தானதெளிவதனைப்பிறுத்துக்கொண்டு
பாஷாணங்கழஞ்சுக்குச்சுறுக்குப்போடே.

அயமணி.

போட்டிடவேபாஷாணங்கட்டிப்போகும்
புகழானசெம்பிவிடவெள்ளியாகும்
ஆட்டிடவேயனைப்பொடியில்விட்டரைத்து
அளவாகவுணந்திடவேமணியுமாகும்
நீட்டியதோர்தங்கமதிற்சேர்த்துருக்கி
நிசமாகவெள்ளிசெம்பிலீய்ந்தாயானல்

காட்டிடவேயாறேழுவரைக்குங்காணும்
நலமானஇரும்பிலிடவேதைதானே. ௧௩௨

தாம்பிரவேதை.

இரும்பைவிட்டுச்செம்பதனைச்சொல்லக்கேளு
எழுத்தாணிப்பச்சிலையின்சாறுநாழி
முருங்கையுடபட்டைசார்நாழிகூட்டி
மூந்தினதோர்குருவகைக்குவராகன்போடு
அரும்பவேயருபதுநாழிகைகடந்தா
லதனுடையதெளிவதனையிறுத்துகொண்டு
துரும்பானசெம்பதனையுருக்கிச்சாய்த்தால்
சுகமாகவீரஞ்சூதுய்யாணுமே. ௧௩௩

பாஷாணக்கட்டு.

துய்யாணிலிடைக்கிடைதான்சேர்த்தாயானால்
துய்யாணுஞ்சொல்லரிதுசொல்லிவிட்டேன்
மெய்யாகச்சொல்லுகிறேன்சதிரக்கள்ளி
விதமானபாலதனைக்கறந்துவந்து
அய்யாகேள்முன்குருவில்வராகன்போட்டு
அறுபதுநாழிகையிருக்கத்தெளிந்துபோகும்
உய்யவேயொருகழஞ்சுவெள்ளையப்பா
வுழக்குநீர்ச்சுருக்குடுக்கக்கட்டிப்போமே. ௧௩௪

நாககட்டு,

போகின்றபாஷாணந்தன்னைவாங்கி
புக்கிடவேகழஞ்சுக்குமஞ்சாடித்தான்

ஆகின்றநாகமதுகட்டிப்போகும்
அந்தயிடைதங்கத்தையதனிற்ருக்கி
ஏகின்றவெள்ளிசெம்பிலீய்ந்தாயானால்
யேழரையாமிதன்பெருமையியம்பப்போமே
வாகுடையவமுறிய்துபடிதானென்று
மைந்தனேமுன்குருவும்வராகனென்றே. கஈஉ

சூதக்கட்டு.

ஒன்ருகப்போட்டதனைவைத்தாயானு
லுத்தமனேகல்மசந்தானுமாந்துகாணும்
பன்ருகத்தெளிவிறுத்துரசத்திற்குத்த
பாலையாம்ரசமதுதானட்டைப்போலாம்
நன்ருகவுதையெடுத்துக்கருவூமத்தை
நலமானகாயதனிற்புடத்தைப்போடு
வென்ருகவோர்புடந்தானகோழியாகும்
விதமாகக்கட்டிப்போம்வெள்ளியாமே. கஈஈ

சூதச்செந்தூரம்.

வெள்ளியென்றசூதத்தைத்தின்ருயானால்
வெள்ளையென்றநரைகளெல்லாம்வண்டுபோலாய்
தெள்ளியதோர்தங்கமிட்டுகெந்தியிட்டு
செந்தூரஞ்செய்திடவேசொர்னமாகும்
வள்ளியதோராசவெள்ளிகெவுனமாகு
மப்பனேசாரணையைத்தீர்ந்தபோது
உள்ளியென்றகாட்டுள்ளிபிடித்துக்கொண்டு
வுத்தமனேமுன்குருவைப்போட்டிடாயே, கஈள

வெள்ளீயம்நீர்வாங்கல்.

போட்டதனைப்பிழிந்திடவே தண்ணீராகும்
புகழான முன்குருவைப் பின்னுமிட்டு
ஆட்டிதனை வைத்துவைக்கத் தெளிவதாகு
மத்தெளிவில் வெள்ளீயமுறுக்கிச்சாய்க்கப்
பூட்டிதனைப் பத்துமுறை சாய்த்தாயானால்
புகழாகக் கட்டிப்போம் பூண்டுபோரு
நாட்டதனில் சரங்கட்டுஞ் சுருக்குப்போட
நலமான குளிகையது கெவுனமாமே. ௧௩௮

லிங்கக்கட்டு.

ஆமப்பா முன்குருவையிலைக்கள்ளிப்பாலில்
அப்பனேயிட்டுவைக்கத் தெளிந்துபோகும்
வேமப்பாவந்நீரில் சாதிலிங்கம்
விதமாகச் சுருக்கிடவே கட்டிப்போகும்
நாமப்பா வெள்ளியிலே வேதையாகும்
நலமான தங்கத்திற் சேர்ந்து ஆடும்
வோமப்பாயிக்குருவையண்டத்துள்ளே
யுருக்கவே வகைக்குக்கால்வராகன் போடே,
போட்டிதனை வெளியில் வைக்க மெழுகுமாகும்
புகழான பாஷாணமெல்லாஞ்சாகு

நீட்டமுள்ளலோகமட்டில்வேதையாகும்
துபோலஇச்சாறுக்குள்ளபோக்கொன்றில்லை
காட்டமுடன்இக்குருவைவைக்கவேண்டாம்
நலமானபச்சையடாபூநீர்ச்சுண்ணத்
தேட்டமுடனித்தொழிலைமுன்னேசெய்து
செயமானலோகத்திலிருந்துதேறே, கசம

விளையகத்தல்.

தேறுதற்குயின்னமொருகருவைக்கேளு
செப்பாதகருவையெல்லாஞ்செப்பினேன்கேள்
யேறுதற்குமலையொன்றுமில்லையப்பா
யிறந்துநீபிறவாதேநீ
கூறுவதுசத்தியமேபொய்யாகாது
கொலையொன்றுமாகாதுகொடுமையாகா
வேறுதுறைபேதுமில்லைவழலையாதி
வேதாந்தக்கருவுக்குமனமதாமே கசக

தீட்சையிரண்டுக்குங்காலம்-சூரியன்தோற்றம்.

ஆமப்பாமனமுருகச்சித்தியாச்சு
அறிவுகொண்டுசிவயோகத்தடுத்துநோக்கித்
தாமப்பாசிவதீட்சைசத்திதீட்சை
சாதகமாய்காலைசிவமாலைசத்தி
போமப்பாயிரண்டுக்குமிடைகலைதான்சித்தி
போக்கோடேமவுனமுத்திப்பூண்டுநோக்க

வேமப்பாமூலத்திமேலேசாடு
மொளிகோடிசூரியன்போலுள்ளேகாணும்

சிவத்தின்கூறு-சத்திகூறு.

காணுதற்குமவுனமுற்றுப்பாருபாரு
காசினியில்விசாரமெல்லாந்தள்ளுதள்ளு
வீணப்பாவிசாரமென்னசமுசாரமென்ன
வெட்டவெளியொன்றுமில்லைசிவத்தின்கூறு
தோணுகின்றரூபமெல்லாஞ்சத்தியாகுஞ்
சுருதிமுடிவிதிரண்டுமெல்லாதுண்டோ
ஆணுகின்றபஞ்சகர்த்தாவெல்லாமாச்சு
வுறுதியிந்தக்கருவின்றிவேறேதாதே. ௧௨௫

சடவாழ்க்கை.

ஓதுவதுவேதமேயோதவேணு
மூலகத்தில்வேதமில்லாதொன்றுமில்லை
மாதுமக்களென்றுதாமெண்ணியெண்ணி
மாள்வதற்கும்பிறப்பதற்கும்வைத்தானீமச
தீதுவென்றதீயினிலேவிழுந்தாயானால்
செடம்விழுந்துபோகுமடாஞானமேது
தாதுவென்றசடமிருந்தால்ஞானம்வாய்க்குஞ்
சகலகலைத்தியானமெல்லாந்தருகும்பாரே. ௧௨௬

நூலின்மகத்துவமுறைத்தது.

பார்ப்பதற்குஇந்நூலேபார்க்கவேணு
பரிபூரணசூத்திரமாய்ப்பாடினேன்யான்

தீர்ப்பதற்குவினைகளெல்லாந்தீட்சைசொன்னேன்
செயமானகற்பமதுதெளியச்சொன்னேன்
கூர்ப்புடனேவாதத்தின்விபரஞ்சொன்னேன்
குறைகளெல்லாந்தீர்த்துவிட்டேன்கூர்ந்துபாரு
சூர்ப்பனகியாசைகொண்டேயெல்லாம்போச்சு
சுருதியுள்ளகெடியனென்றுமெல்லாமாச்சே.

லோகத்தோடொத்துவாழ்த்தல்.

ஆச்சிந்தலோகத்திலிருக்கும்போது
அசலருடன்கூடாதேயாணவம்பேசாதே
நேச்சிந்தவுலகத்தில்நடக்கலாகா
நடந்தாலுமவுனத்தேதூங்குதூங்கு
காச்சந்தமவுனத்தைவிட்டாயானால்
சருவிகடான்கொல்லுமடாதியானம்போச்சு
மூச்சென்றயோகமுதல்ஞானம்போச்சு
முறையோடேயிருக்கவென்றால் குகையைக்காரே.

சித்தரென்போர்நெறி,

கார்ப்பதுதான்பூரணத்தைக்காக்கவேணும்
காரென்றுபுருவமையத்திருக்கவேணும்
தீர்ப்பதுதான்வாசனையைத்தீர்க்கவேணும்
செகமெல்லாமொன்றுமில்லையெண்ணவேணும்
ஆர்ப்பனத்துக்கழிவில்லாதிருக்கவேணு
மப்பவல்லோசித்தனென்றஆண்மையாச்சு
நாற்பதுக்குள்கற்பமுண்ணக்கோடியாச்சு
நரைத்தாக்கால்நாளதிகஞ்செல்லும்நன்றே.

வருடநிலை.

நன்றாகநாளதிகஞ்சென்றாலென்ன
நாட்டிப்பார்வருடமொன்றில்சித்தியொன்று
பன்றான ஆண்டதுதான்பத்துக்குள்ளே
பரிவானகாயசித்தியோகசித்தி
யுன்றானகெவுனசித்திஞானசித்தி
யுரப்பானசட்டைதள்ளிக்காந்தியாகும்
ஒன்றானதேகமதுவரூபமாகு
முத்தமனேகத்திலடுவோடும்பாரே. ௧௪௮

சட்டைகழலுமாற்கம்.

ஓடுகின்றதத்துவந்தான்தொண்ணூற்றாறு
மோர்கருவிக்கோர்சட்டையுரிந்துதானால்
சாடுகின்றபிறவியெல்லாந்தள்ளிப்போச்சு
சாயுச்சியபதவியிலேசார்ந்துபோச்சு
பாடுகின்றவேதாந்தம்வெளியாய்ப்போச்சு
பரிபூர்ணந்தானாச்சுபகலுமாச்சு
வேடுவன்றானெடுத்தபுழுத்தன்ரூபங்கொண்ட
விதமாச்சுமாய்கையெல்லாம்வெளியுமாச்சே.

ஆச்சப்பாவரதத்தின்கருவைக்கேளு
அப்பனே ஆயிரத்திநூறுக்குள்ளே
பேச்சப்பாசகலகலைசெய்தியெல்லாம்
பேசாதகருவையெல்லாம்பேசிவைத்தேன்

போச்சப்பாபேசிவைத்தகருவேதென்றால்
புகழானசவுக்காரப்போக்குத்தாக்கு
மேச்சப்பாமுப்பூவின்தீட்சைமார்க்க
மியலானகடுங்காரச்செயநீர்போக்கே. கரு௰

நூல்த்தொகைவிரிவுரைத்தல்.

போக்கானசுண்ணத்தின்கருவுஞ்சொன்னேன்
புகழானசெயநீரின்கல்லுஞ்சொல்லி
வாக்கானகளங்கோடுசெந்தூரங்கள்
வகையானதிராவகமுஞ்சரத்தின்வைப்பும்
தாக்கானகருவோடுகுருவுஞ்சொல்லி
சாதகமாங்கைபாகஞ்செய்பாகங்கள்
தூக்கான இடைபாகம்பாகைபாகஞ்
சுருக்காகுந்தேகமொடுதேகமென்னே. கருக

என்னவேஞானமொடுமூலிகையின்கூறு
மியல்பானகைபாகமெல்லாஞ்சொன்னேன்
வண்ணமாமெந்தெந்தநூல்களெல்லாம்
வாகானநிகண்டுமதுமருவிப்பாரு
பொன்னானபொன்னதுபோலிந்நூலுந்தான்
போக்கொன்றுந்தப்பாதுமறைக்கவில்லை
நன்னயமாஞ்சாத்திரத்தில்மறைப்பேனென்று
நாட்டினேன்வெளியாகக்காட்டினேனே. கருஉ

சுயவர்நிலமை.

நாட்டிலேயிப்படிதான்வெட்டவெளியாக
நாட்டியுந்தானறியாட்டாலென்னசெய்வோம்
பாட்டிலேசொன்னதென்றும்பலியாதெனறும்
பாவிகடாமனெடுத்துறைப்பார்பழமையல்லால்
வீட்டிலேயிருந்துகொண்டுவீண்வாய்ப்பேசும்
வெள்ளாட்டிப்பயல்களுக்குசாத்திரமெய்யாமே
தேட்டிலேசாத்திரத்தைத்தேடவேணுந்
திரவியிலேமனமிருக்கச்சித்தியாமே. ௧௫௩

பூசையில்தாயைநினைத்தல்.

சித்திக்கவேணுமென்றால்சொல்லக்கேளு
ஜெகஜாலமாடுகிறதாயைக்கேளு
புத்திக்குமவள்பதத்தைப்பூசைபண்ணு
போக்கொன்றுந்தப்பாதுபொய்போகாது
முத்திக்கும்பூசைமுறைதன்னைக்கேளு
மூண்டதொருசமாதிக்குள்கிரிவேணும்
பத்திக்குமூதண்டலேகியந்தான்
பாங்கானலகிரியப்பாசட்டமாமே. ௧௫௪

தாய்வரமீய்தல்.

சட்டமாங்கற்பத்துக்குறுதியாகுந்
தாயோடுதந்தைக்குப்பிறிதியாகு
மிட்டமாம்வாமத்தைக்கொண்டாயாகு
லெடுத்ததொருதுறையெல்லாமிடறிப்போகுந்

தொட்டதொரு பூசையிலேவாமம்வைத்து
சுகமாகப்பூசிக்கச்செலமதானால்
அட்டமாசித்தியதுவாச்சுதப்பா
ஆத்தாளாமப்பனுக்குமாச்சுதென்னே. ௧௫௫

விவேகதாட்சி

ஆச்சுதேயோகத்துக்கேணியாச்சு
லப்பனேகற்பத்துக்காகாதாகும்
வாச்சுதேயென்றுசொல்லிவாமங்கொண்டு
மதிமயங்கிவாய்புலம்பிமயங்கிப்போனால்
மேயச்சுதேசாபமதுதீரவில்லை
மேயமென்றவித்தைகைவதுவெய்தவில்லை
காச்சுதேயறிவென்றஞானமபோச்சு
கசுமாலவாதியென்றகழுதைதானே. ௧௫௬

பச்சைப்பூரவைப்பு

தானென்றகற்பூரஞ்சொல்லக்கேளு
சாதகமாய்பரங்கிவைப்புக்கிடையாதப்பா
யேனென்றருடனதுபலந்தானென்று
யியல்பானவெடியுப்புப்பலமுங்காஸ்தான்
சேனென்றவவர்ப்பூவும்பலமதொன்று
சேரதிலேகளஞ்சியொன்றுபூசுகூட்டி
வானென்றஆவினெய்விட்டரைத்து
வைத்துகுப்பியிலேசீலேசெய்து. ௧௫௭

செய்துமேவாலுகையில்தீயைமூட்டி
சுகமாகமுததீயுமூன்றுசாம
மெய்துமேதீயாற்றியெடுத்தாயானா
விளங்தேங்காய்ப்போலவுந்தானிருக்கும்பூரம்
கொய்தவொருகுங்குமப்பூவாசம்போலக்
குணமாகுமபச்சையென்றபூரந்தானு
மெய்துமேயளப்பாகும்வாதத்துக்கு
மீதுவாதிகுருவாகுமிசைந்துபாரே. கரு௬

சவ்வீரவைப்பு.

பார்ப்பாயின்னமொருசேதிகேளு
பரிவானவீரத்தின்வைப்பைக்கேளு
நேரட்பாகண்டதனீலேவிற்கும்வீரம
நேராகப்பலமொன்றுயெடுத்துக்கொண்டு
சேரப்பாவதிரேடுதுரிசிசினஞ்
செய்கவொருகவாச்சாரமன்னபேதி
பூரப்பாகறியுப்புயுவருப்போடு
யுறவானவெடியுப்புப்பலமூங்காலே. கரு௭

காலாகறிதுவெல்லாம்பொடித்துக்கொண்டு
கருணைபெறவேணுமென்றுகுப்பிக்கேற்றி
நாலாகமுத்தீயுமாறுசாமம்
நலமாகவெரித்ததனைவாங்கிக்கொண்டு
பாலானதேங்காய்போலிறுகிரிற்கும்
பண்பாகவுடைத்ததனைவைத்துக்கொண்டு

சேலாகமுன்போலே நிறுத்துக்கொண்டு
சேர்த்துநீபொடித்தெடுத்துக்குப்பிக்கேற்றே, ()

வீரத்தின மகத்துவம்.

ஏற்றியேமுன்போலே எரித்துவாங்கு
இப்படியேமும்முறையிலிருக்கும்வீரம்
தேற்றியேயிவ்வீரஞ்சகலத்துக்குந்
திறமானகுருவடாவீராசன்
நீற்றினமுமுருக்கினங் கட்டினமுங்கோடி
நேரானசெந்தூரக் களங்குகோடி
விற்றியேசெயநீருந் திராவகமுங்குருவும்
மேலானசாரணையும்வீரமாமே. கசுக

சித்தருக்குண்டான நாலுவித்தைவிபரம்.

வீரமாஞ்சித்தருக்குச் சொல்லக்கேளாய்
வித்தையிலேநாலுவித்தைமேலாம்வித்தை
வாரமாம்வாதமொடு வசியமாற்றம்
வளமானஅஞ்சனமும் வரவும்வேணும்
ஆரமாமிதுநாலுமில்லாவிட்டா
லவ்வாகுஞ்சித்தருக்குளடுக்கமாட்டார்
பாரமாம்வாதமொடுவசியஞ்சொன்னேம்
பார்ப்போர்க்குஅஞ்சனமுமாற்றம்பாரே. கசுஉ

மாத்தனம்

மாற்றமென்றவித்தைக்குலனைகளையக்கேளாய்
வால்நீண்டகருங்குருவிவில்லாவிட்டால்

தோற்றுகின்றகாமரூபி பிணைச்சல்பார்த்துச்
சுருதியாய்ப்பிடித்துவங்துசொல்லக்கேளாய
ஏற்றுகின்றவெவ்வேறேசட்டிற்போட்டு
வெரித்துநீலறுத்திடுவாய்கருகமட்டும்
போற்றுகின்றயழிஞ்சிலின்வேர்கொண்டுகிண்டி
பொடியாக்கிக்கரிப்போலேலறுத்துக்கொள்ளே.

அழிஞ்சில் தயிலம்.

வறுத்தகரிதனையைப்பாய்தயிலங்கொண்டு
வாகானதயிலத்தின்வளமைகேளாய்
பொறுத்ததொருயழிஞ்சில்விதைத்தயிலஞ்செய்து
புதுமையுள்ளதயிலமதுவிட்டுமத்தி
செறுத்தவிதைப்பொடிசெய்துக்கலசத்திட்டுத்
தீயானசூரியன்றன்முகத்தில்வைக்க
கறுத்ததொருதயிலமதுவிறங்கும்போது
கரியுடனேசேர்த்தரைத்துச்சிமிழில்வையே.

வசியம்-கருங்குருவிமை-குழியானைமை.

வைத்ததனைத்திலதமிடவசியமாகு
மாற்றமாங்தேகமதுஆர்க்குங்காணு
வுற்றதொருகருங்குருவியிதுபோற்பணண
வுறுதியாக்திலதம்துவுணமையாகுஞ்
சித்தியுள்ளகுழியானைச்சிறங்கையொன்று
செய்திடவேமுன்போலேசித்தியாகும்

புத்தியுள்ளபேர்களுக்குப்பிழைக்கச்சொன்னேன்
புதுமையுள்ளவஞ்சனத்தைப்புகலக்கேளாய். ௧௬௫

அஞ்சனமை

கேளப்பா அஞ்சனத்துக்கஞ்சனப்பாஷாணங்
கிடையாதுபறங்கிவைப்புக்கொடுக்கமாட்டான்
நாளப்பாநாட்டிலுள்ளகருவைக்கொண்டு
நாட்டுகின்றேனஞ்சனத்தைநன்றாய்க்கேளு
வேளப்பாகருங்குருவி சிவந்ததொன்று
விதமானபச்சோந்தியுடும்புகாக்கை
சூளப்பாபச்சைப்பாம்பரணைபூநாகஞ்
சோதியொத்தயிந்திரமாங்கோபப்பூச்சி. ௧௬௬

மணத்தவளைத்தயிலம்

பூச்சியென்றவகையெல்லாமுழுதுமாகும்
புகலுகின்றமகத்தெல்லாந்தலைகளாறும்
ஆச்சியென்றதிதுவெல்லாமுணர்த்தித்தாளா
யாக்கியேபரணியிலேயடைத்துக்கொண்டு
வாச்சுதென்றமணத்தவளைத்தயிலஞ்சொல்வேன்
மைந்தனேநாறுதானெடுத்துவந்து
காச்சிதென்றவெய்யலிலேயுலர்த்திக்கொண்டு
காட்டினுமணைக்குமுதத்துக்காசெள்ளோடு. ௧௬௭

திரிசெய்விதம்

எள்ளோடுஅழிஞ்சில்விரையிடித்துக்கொண்டு
யிதமாகக்குழித்தயிலமிறக்கியேதான்

வில்லாதேபறணியிலேயடைத்துக்கொண்டு
மேன்மையாம்பெண்ணுடையவிலக்கச்சிலைத்
தள்ளாதேசாணிகளஞ்சதிரமாகத்
தானெடுத்துவகனில்முன்றாள்பரப்பியேதான்
கொள்ளமட்டேந்திரிபோலேயுருட்டிக்கொண்டு
குணமானவெள்ளெருக்கின்றூலைச்சுற்றே. க௬அ

மைவாங்கும்வகை-மைபார்க்கும்பருவம்

சுற்றியதோர்திரியதனைவிளக்கிலிட்டுச்
சுகமானமுன்றயிலமதனில்வார்த்துப்
பத்தியாங்காரமையோட்டுகருள்ளே
பத்துகின்றமையதனைப்பறண்டிக்கொண்டு
வெற்றியாமுன்றயிலம்புத்துத்தேனும்
விதமாகச்சரியிடையாய்கூட்டிமத்தி
சித்தியாம்பதினுறுவயதுசென்ற
செல்வர்கையிலிட்டிடவேதெரியுந்தூரம். க௬௯

அஞ்சனத்தின்குணம்

தூரமதுபாழிகைக்குள்பாதாளத்திற்
சூட்டிவைத்ததனங்களெல்லாந்தோணலாகும்
காரமதுஆர்கைபிலிட்டாலுந்தான்
கைகடந்துகாணும்டாஅதீதமைதான்
வாரமதுவானபேய்க்கணங்களெல்லா
மாறிவிட்டமந்திரங்களொன்றும்வேண்டாஞ்

ஞானமாம்பேய்களுக்குக்கருவதொன்று
சொல்லுகிறேன்கழுதைநெய்யின்களுக்குத்தானே

பூதவிலக்கந்தயிலம்

சுறுக்காகவிருக்கவென்றால்சொல்லக்கேளாய்
சுருதியாங்கழுதையுடகொழுப்பைவாங்கி
யிறுக்காகவுருக்கிநெய்யையெடுத்துக்கொண்டு
யிகமானதலங்களிலேதீபமேற்று
உறுக்கானபேய்பூதமோடிப்போகு
மூன்மையிதுசொல்லிவிட்டேனுலகுள்ளோர்க்குச்
சுறுக்கானவாதவித்தை யாருமுன்னாகத்
தாரணியிற்செய்துகொண்டுதபசுபண்ணே. ()

தனங்களிருக்குந்தலம்-அளகர்மலை

பண்ணையிலேதனங்கிடைக்குந்தலங்கள்சொல்வேன்
பாரிலேமலையாதேபாங்குகேளாய்
உண்ணியதோர்மதுரைக்குவடமேற்காக
வுரைக்கிறேனளகர்மலையுயரத்தானும்
நண்ணையிலேசுனையருகில்லிருக்குமொன்று
நலமாகவிங்கிழேசுனைகாணென்று
வண்ணையிலேயுருவியிடவுமலைப்பா
வுலகத்தோராலோர்தீர்த்தமென்றே. கஎஉ

சித்தர்வைப்பு

தீர்த்தமென்றவச்சுனையில்கிடாரமொன்று
செயமான ஆயக்கால்தன்னிற்றுங்கும

நீத்தமென்றமேவோரா ளுக்குள்ளேயப்பா
நேரானசித்தர்வைப்புநெடுங்காலமாச்சு
காத்தமென்றகாயசித்திச்செய்யவேண்டில்
காசினியிலதையெடுத்துச்செலவுசெய்து
வாத்தமென்றகற்பமுண்டுவாழ்வோர்க்காகும்
வையகத்தோராசைவைத்தால்வாயாதென்னே.

மயிலாடுமலையில்கார்த்திகைவீரவர்ச்சுனன்வைப்பு

வாய்க்கவின்னஞ்சொல்லுகிறேன்மதுரைக்குமேற்கே
மலையொன்றுமயிலாடும்பேர்க்கையென்பார்
பாக்கியமாமம்மலையிற்கிணறொன்றுண்டு
பாரபபாவதில்தக்கிப்பாருநீதான்
தாக்கியதோரிரண்டாளின்றாழப்போனால்
தங்கமென்றபாளமதுநிறையவுண்டு
தாக்கியகோர்பாளத்தையெடுத்துக்கொண்டு
கார்த்திகைவீரவர்ச்சுனன்றானவைத்தவைப்பே
வீமனாகமலையில்சித்தர்வைப்புசவெந்தூரம

குகை கதவுதிறக்க.

வைப்பானபவனுச மலைக்குமேற்கே
மைநாகமலையென்றுஅகர்க்குப்பேரு
செப்பானகுகையொன்றுவதிலேயுண்டு
செந்தூரக்காடப்பூாசிதர்வைப்பு
மெய்ப்பானகுகைவாசல்திறப்பதற்கு
விதமொன்றுசொல்லுகிறேன்விரும்பிக்கேளாய்

ஒப்பாகச்சொன்னஉச்சாடனஞ்செயித்து
உணர்வாகநாற்றெட்டுஉருக்காண்சார்பே கஎரு

செந்தூரப்பதம்—பக்குவம்.

சாற்பாக்ச்செயித்திடக் காண்கிரக்கும்பாரு
தயவாகவதினுள்ளே சென்றுயாறு
ஊர்வாகக்கோடிசெப்பில் செந்தூரங்க
லட்டலோகமபழுக்கும் வேதைமார்க்கம்
பேராகமண்டலங்கொளகாயசித்திப்
பிணியானதணுக்காதுவைத்தியத்தின்மார்க்கம்
ஆர்வானகெவுனசித்திக் குளிகைசித்தி
யட்டமாசித்திமுதலாமிம்பாரே. கஎசா

சுக்கலைடக்க—கருமலை

பாரப்பாவதிலிருக்குஞ்செந்தூரத்தைப்
பரிந்துனைகருமலைமட்டு மெடுத்துக்கொண்டு
சேரப்பாக சுக்லையடக்கவேணுமடிச்
செயித்திடவாய்நாற்றெட்டுகமபனர்தான்
ஆரப்பாகலைத்திறக்கப்போறு
ரறையகிறேனின்னமொருதிசயந்தான்
காரப்பாகளக்காட்டின்மேற்கதாகக்
கருமலையொன்றம்மலையில்சுனைதானென்றே. கஎஎ

கருமலையில்தயிலவைப்பு

ஒன்றானசுனையருகிற் றிணைரொன்றுண்டு
உத்தமனேதயிலமதுமிறையளிர்ந்துங்

நன்றானதயிலத்தைக்கலசந்தன்னில
காணப்பார்முகந்துகொண்டுகருவைக்கேளாய்
தன்றானஇரும்புசெம்புலோகமெட்டில்
நாட்டினால்தங்கமதுநலமதாகும்
உண்டானசெய்திபிது யின்னங்கேளாய்
உரைக்கின்றேன்வெளியாகவுரைக்கின்றேனே. ()

நம்பிமலையருகில் விபூஷணர்வைப்புதங்கக்காசு

உரைக்கின்றேனம்பிமலைநம்பிக்கோவி
லுற்றதொருசந்நிதிக்குக்கிழக்கதாக
நினைக்கின்றேன்மலையருகில்குத்துக்கல்லு
நிற்குதடாவதனடியில் தங்கக்காசு
கலைக்காசுங்கற்குழிகாணுமதுக்குள்ளே
கனகமென்றகாசதுகாண்கோடியுண்டு
திறக்கின்றேனமூடிக்கல்செய்தமூடி
திறமாகஇருக்குபடாதிறக்கொணாதே ௧௭௬

கதவுதிறக்கத்தியானம்

ஒன்றானகல்திறக்கும்வகையைக்கேளாய்
உற்பனமாய்வயிரவனைப்பூசித்தேதான்
நன்றானவயிரவன்றன்தியானமோத
கலமானமூடிக்கல்திறந்துபோகும்
பன்றானகனகத்தையெடுத்துக்கொண்டு
பரிவானமூடிதன்னையடைத்துப்போடு

வின்றானவிபூஷணர்தான்வைத்தவைப்பு
மேதினியில்கடவாமேயமலையிலேறே. ௪அ௰

மருந்துமலை,

ஏறுதற்குஇன்னமொருவகையைக்கேளாய்
இயல்பானகுமரிக்குமேற்கேயப்பா
கூறுவாருலகத்தோர்மருந்துமலையென்று
குறித்துவைத்தமருந்துதனையறியமாட்டார்
தேறுவாயம்மருந்தையறிவதற்கு
செய்தியென்றுசொல்லக்கேள்மேற்கதாக
ஏறுவாயம்மலையினுச்சிதன்னி
லிருக்குகடாசுனையொன்றுயிருக்கும்பாரே. ௪அ௧

பனைப்பாஷாணவேதை

இருக்கின்றசுனைக்குள்ளேபாஷாண
மியல்பானபனங்குலைபோல்கிடக்கும்பாரு
அருக்கின்றகுலையதனையெடுத்துக்கொண்டு
அழகானதீயிலிட்டுச்சிவக்கக்காச்சிப்
பருக்கின்றவெள்ளாட்டின்பாலிற்போட்டால்
பாதியிருகூறாகவெடித்துப்போகும்
குருக்கொண்டபாஷாணங்கவுரிபோலக்
கோழிமுட்டைகருப்போலுறுகொள்கைகாணும்

(மருந்துமலையில்-தயிலமிருப்பிடம்-அனுமார்வைப்பு)

காணுகின்றபாஷாணங்கைமுற்றிவாங்கி
கால்ப்பணமாயேற்றவிடக்கற்பமாகுங்

தோணுகின்றபாஷாணவகையிற்சேர்த்து
சுகமானகாரயிட்டுஉருக்கிவாங்கிப்
பூணுகின்றநவலோகந்தன்னிற்பூட்ட
பொன்னாகும்பதத்தையும்பொய்யாதப்பா
கோணுகின்றவகைநடுக்கக்குகையொன்றுண்டு
குகையினிடபாகத்தில்வாசலுண்டே. ௧௮௫

வாசல்திறக்கநவகோண-வாலைபூசை.

வாசலதுகாணமலடைத்துப்போட்டார்
மகத்தானசித்தரிடமாய்கைமாய்கை
ஊசலென்றகதவதுகாண்திறப்பதற்கு
உபாயமொன்றுசொல்லுகிறேனுண்மையாகக்
காசலையாய்மலையிலிருந்துகொண்டு
கருகியேநவகோணவாலைப்பூசை
யேசலுடனும்பதுநாள்பூசிக்கக்கா
லீஸ்பரிபாள்கிருபையினால்வாசற்காணும் ௧௮௬

கிருபையினால்வாசலதுதிறந்தாரால்
கேளப்பாவனுள்ளேநுழைந்துபாரு
உறுதியுள்ளவீடதுபோல்விலாசங்காணு
மொருபக்கத்தொருகிணற்றில்தயிலம்நிற்கும்
பெறியறையத்தயிலமொன்றுகொண்டு
பூரணமேயென்றுசொல்லிபூசித்தேதான்
மறுபடியுங்கதவைத்தானடைத்துப்போட்டு
வந்திருந்துசெய்யுகின்றமார்க்கங்கேளே. ௧௮௭

தயிலம்வந்தமார்க்கம்

மார்க்கமந்தத்தயிலம்வந்தவகைதான்கேளாய்
மாருதிதான்மருந்துமாமலையிற்சென்று
சேர்க்கையிலேகொண்டுவந்தார்ஸ்ரீராமர்போரில்
செத்தவர்களையெழுப்புஞ்செய்கையாலே
போர்க்களத்தில்மடிந்தவர்கள்பிழைத்தபோது
போகாதேவாங்கிவைத்தார்புதுமையாக
மார்க்கமுள்ளதயிலமதுகொண்டபேர்கள்
வளிவிறந்தசித்தரடா ஆதியாமே. க௲சு

ஆமிந்தத்தயிலத்திற்பணவிடைதான்கொள்ள
ஆதிசதாசிவன்வணக்குமிருத்தும்பாரு
ஓமிந்தத்தயிலமிதுவார்க்குங்கிட்டு
முறுதியுள்ளசித்தனென்றால்பிலக்கும்பாரு
வாமிந்தச்சாத்திரந்தான்கிடைத்தபேர்க்கு
மறுபிறவியில்லைமகத்தானசித்தன்
சோமிந்துதரித்தசிவன்சொன்னமார்க்கஞ்
சொல்லிவிட்டேன்வெட்டவெளியாகத்தானே. ()

தோற்றமெய்தல்

வெளியாகத்தோணுதற்குக்கருவைக்கேளாய்
வேதரிந்தநூல்களெல்லாமவிளைந்துபாரு
ஒழியாதஆசையெல்லாமொழித்துப்போடு
ஊடுருவச்சுழிமுனையையூணிப்பாரு

வழியோடேகற்பமுண்ணவகையைப்பாரு
வாதவித்தைசெய்வதற்குவகையைப்பாரு
தெளிவாகவேறுதற்சூத்திட்சைபாரு
ஜெகஜாலக்கூத்தெல்லாஞ்சேரப்போகவே. ௧௮௮

கொங்கணர்பெருமை.

போக்கானசாத்திரங்களொன்றுமில்லைப்
பூரணத்தினூல்போலேசொல்லாதொன்றும்
நோக்கானகொங்கணர்சொல்கடைக்காண்டத்தில்
நுணுக்கங்களதிகமுண்டுகண்டுபாரு
வாக்கானவிந்நூலுமந்நூலும்போல்
வகைவிபரமாணதொன்றும்விளங்கவில்லை
தூக்கான தூக்கெல்லாஞ்சொல்லிவிட்டேன்
சோதித்தால்தெரியுமடாசுருதிச்சொல்லே. ௧௮௯

நூல்மகத்துவம்

சுருதிகண்டால்சுருதிகொண்டேயேறவேணுஞ்
சன்மார்க்கர்க்கிந்நூலைச்சூட்டலாகா
பருதிகண்டபனிபோலேவினைகள்நீங்கும்
பாரிலுள்ளோர்க்கிந்நூலைப்பகரவேண்டாம்
சுருதாமவிந்நூலையீய்ந்தாயானால்
கயிலாயச்சித்தர்வந்துசபிக்கச்செய்வார்
ஒருத்தராய்க்கண்டுகொண்டுமனத்துள்ளவைத்து
உரத்துடனேவந்துவிடும்லையின்மீதே. ௧௯௦

மீதானமலைகளிலேயேறினாலும்
விருதாகுமிந் நூலைக் கைவிடாதே
வாதாரெருசித்தர்வந்துயெதிர்த்தாரானால்
மறவாமலிந் நூலையெடுத்துட்பேசு
ஓதாமல்வாய்பிதற்றியோகிவார்க
ளனைக்குத்தானெதிராருவுண்டோவென்று
ஆதாரமானதொருகருவெல்லாந்தா
னறைந்தகதனூற் பூரணநூலானலாமே ௧௬௧

குழிக்கல்லளவு

வாறானசுழிக்கல்லின்மார்க்கங்கேளாய்
மைந்தனே பிரம்மாவின் சிரசுபோலே
கூறானவகலமணிவிரல்முப்பத்தாம்
சொல்கையாம்கீளமணிவிரல்நால்பத்து
வீரானவுள்ளபதுதானேவிரலிரண்டு
வீதியிலேயாழமிதுவிரலிரண்டு
பேறான இருபுறமூக்குமாகும்
பெரிதானகுழியைத்தான்பேசுவேனே ௧௬௨

(குழிக்கல்லளவு-பிரட்டளவு-செபமாலைக்கணக்கு)

பேசுகிறேன்பதினாறங்குலமாம்நீளம
பெரிதானமுகவட்டமணிவிரல்நால்வீதி.
பாசுநேரிம்மிடியங்குலமபத்தாகு
மரவிடையுஞ்சிவலிங்கமானவாறும்

விசுகின்றபிரம்பதுநான்மொழியைந்தாகும்
வேதாந்தநீளமதுவிரல்பத்தொன்று
ஈசுரன்றன்வகுத்தருளுங்கணக்கிதப்பா
யேற்றசெபமாலை பதினாறுமுகமஞ்சே. கசஈ

சித்தர்வேடமறிக—யோகதண்டுப்பிரமாணம்

குண்டலப்பிரமாணம்—யோகவேட்டி.

அஞ்சாகுமாராகுமதிகமாகு
மணிவிரலால்யோகதண்டாறுமாகும்
யஞ்சாக்ஷரக்கவசகுண்டலந்தான்கேளு
பரியினுடசெம்பதிகம்பளிங்கதிகமாகும்
மஞ்சாடிபதினொன்றுபதினாறாகு
மக்களேயிருபுறமுமகிழ்ந்துகொள்ளு
நெஞ்சமறாகச்சாகிறயோகவெட்டி
நெடுநீளந்தொண்ணூற்றாறங்குலமாம்நேரே. கசச

கயிலாயவர்க்கம்—ஆசனம்—லிங்கம்—கோவணம

மணி—கைச்சவம்

நேராணவிதிறல்விரலேயாகும்
நிஷ்டைக்காசனம்புலியாசனமுமாகும்
கூறுனாரசலிங்கம்பூசையாகும்
கோவணந்தான்பூங்காவிக்கடங்கையிற்
சீரானரசக்குளிகைச்செபமாலைக்குச்
செகமதனில்கிடையாதுசெபம்விசேடம்

பேரானகைச்சரந்தான் உப்புமணியப்பா
பேசரியகயிலாயவற்கத்தோற்கே. ௱௬௫

வற்கத்தின் பெருமையறிதல்,

வற்கத்திலதிகமடா சிவயோகந்தான்
வணமையுள்ளமெய்ஞ்ஞானமார்க்கமரெண்டு
சொர்க்கத்தில்சொர்க்கமென்றபேர்பெறவுனக்குத்
தொல்லுலகில்மனிதரோடுறவுமுண்டோ
கர்த்திக்கக்கர்க்கமென்றகசடர்தங்கள்
கையிலேயேற்பதுதான்மிகவுங்கொஞ்சம்
மர்க்கத்திலாகவுன்னேவணங்கவேணும்
வணங்காமற்போனதென்ன வறிந்துகொள்வே. ()

சிவயோகம்—மெஞ்ஞானிமார்க்கம்.

அறிவானபேரின்பத்தடுத்தானுகி
லசைவையென்றதிட்டைபத்துமறிந்தானுகில்
குறியானசிவயோகங்குறித்துக்கண்டார்
கோமனையாம்பராபரையிருக்குளைத்தைக்கண்டார்
பிரியமல்சிவனுடையவொளியைக்கண்டார்
பேரானசிவயோகரிஷிமெஞ்ஞானி
நெறியானவிதர்க்கெல்லாமறிவேயாசா
நினைத்துமக்காளொருமனதாய்நிலைத்திடடே. ()

யோகத்துக்கதிகாரி,

நிலைத்திடவொன்றலுமநிலைக்கமாட்டான்
நீநிலகில்கோடியிலேயொருவனப்பா

கலைத்திடவொன்றாலுங்கலைக்கப்போகா
சனத்தகலமுள்ளதொருராசிசேர்ந்தோர்
மலைத்திடவொன்றாலுமலைப்பாறோதான்
வச்சிரம்போலறிவுடையமக்காள்மக்காள்
உலைத்திடவொண்ணபுத்தியுலகிலுள்ளோ
ரோகோகோவொருகோடிவுலுத்தகாணோர்.

கற்பி பொய்வேடர் நிலை.

காணுவேன்வாதமென்பார்யோகமென்பார்
கற்பமுண்ணப்போறனென்பா ருண்டேனென்பார்
பூணுவேன்றீட்சைபத்தும்பெற்றேனென்பார்
பூரணநூல்பாராதபுலையரப்பா
தாணுவாய்நின்றபராஞ்சோதிகாணார்
சதாசிவன்றான்வந்தாப்போல்பூசைசெய்வார்
ஆணுவத்தாலலைந்துகெட்டமட்டைப்பேச்சை
யடுத்துநின்றுகேளாதேயகலப்போவே; ௱௯௬

சித்தர்மரபுளோர்க்குரைத்தல்.

போவென்றுசொன்னதுதானுரைமைந்தா
புகழ்பெரியசித்தருடமரபுள்ளோரைக்
கூடென்றுதர்க்கமிடுமூலசமான்பர்
கூட்டமதைவிட்டேவிடுகுன்றிலேறு
தேவென்றுசித்தருடன்சேரவேணுஞ்
செப்புவார்வேதாந்தந்திறந்துசொல்வார்

ஆமென்றலலையாதேகற்பங்கொள்ளாய்
அப்பனேயோகமுற்றாலதீகப்பேரே. ௨௱

பேறறிதல்.

பேறென்றுசொல்வதுதான்ஞானப்பேறு
பேசரியவேதாந்தம்பெற்றபேறு
நூறென்றுபூரணநூல்பார்த்தபேர்கள்
நுண்மையென்றுஞ்சிவயோகத்திருந்தபேறு
மாறென்றகாயசித்தியானபேறு
மகத்தானதீக்ஷைவிதியறிந்தபேறு
ஆறென்றவமுர்தமதையுண்டபேறு
யோகோகோகெவுனசித்தியுறுதிப்பேறே. ௨௱௧

வயிராக்கியம்பூணல்-ஆக்கைநிலையாமை.

உறுதியாமித்தனைக்குங்கருவேதென்று
ஊக்கமாமனமல்லோவிதற்குமூலம்
பொறுதியாங்குணம்வந்துசார்ந்தானால்
பூலோகமாய்கையெல்லாம்விட்டதாற்
சுருதியாமனமுருகிநிராசையால்
சொல்லொண்ணுந்தப்பாதுசித்தியாச்சு
விறுதாவிலலைந்தலைந்துஞானம்பார்த்தால்
யோற்றமாம்பேர்மேல்விழுந்துபோமே, ௨௱௨

பெரியோர்பெருமை

வீழ்ந்திருந்துபோகின்றபேரோயல்லால்
மெஞ்ஞானம்வந்தவர்கள்காரப்பா

சூழ்ந்திருந்தவண்டமெல்லாஞ்சோதித்தாக்கால்
சுகுர்தவான்கோடியிலேயொன்றுகாணும்
வாழ்ந்திருந்தவுலகத்தேயிருந்தாலுந்தான்
மானிடரிலொருவனடாவறியப்போகா
தாழ்ந்திருந்தகன்மையுற்றப்பெரியோர்போலத்
தாரணியிலேயிருப்பார்பெரியோர்தானே உ௱௩

சமயக்கோள்.

தானென்றகலைக்கியானமறிந்ததென்ன
கற்மமொடுமாயையுற்றால்தவறிப்போகும்
ஊனென்றவிராசையுற்றுமாயகைபோக்கி
மனமுருகிப்பூரணத்திலன்புசேர்ந்து
கோனென்றுயிருந்தவற்குயித்தனையுமெய்துங்
குவலையத்திலறுசமயக்குருடாகேட்டார்
தேனென்றசிவபூசைசத்திபூசை
தெரிந்தவனேசிவயோகிசித்தனாமே, உ௱௪

இந்நூலின்தொகைக்கியன்றநூலின்பெயர்,

ஆமென்றசித்தருக்குமிந்நூல்வேறு
மப்பனேபூசையிருநூறும்வேணும்
தாமென்றதீக்ஷையிருநூறும்வேணும்
சாதகமாய்ஞானத்திருநூறும்வேணும்
ஏமென்றவாதமிருநூறுவேணும்
இயல்பான்கொங்கணருஞ்ஞூறும்வேணும்
வாமென்றசார்வுக்குச்சட்டநாதா
வைத்தாரேவெளியாகவாதந்தானே, உ௱௫

கல்வியொழுக்கம்,

வெளியாகச்சொல்லுவரோ வேதநூலும்
வேதாந்தியானுக்காலடக்கம்வேணுங்
களியாகவுலகத்தேகருணைச்சொன்னால்
கழுதையவன்கரையேறமாட்டான்போபோ
சுளிவாகமனதுள்ளேயடக்கமானால்
சுருதியாஞ்சித்திக்குஞ்சித்தனாவான்
தெளிவாகப்பேசுவதார்சித்தர்பேசார்
திறப்பதார்செடமழிந்தஞானிதானே. உ௱௪

ஏகபாதவிளக்கம்.

ஞானமென்னயோகமென்னஇரண்டுமொன்று
கலைமறியாமாடுகெடான்வெவ்வேறென்பார்
பானமென்னவமுர்தமென்னஇரண்டுமொன்று
பண்பறியாப்பாவிகடானசுத்தமென்பார்
மானமென்னஈனமென்னரவிமதியென்ன
வையமென்னவானமென்னஆண்பெண்ணென்ன
தானமென்னவுலகமென்னசாதியென்ன
கருதிப்பாரொன்றுக்குக்காணுங்காணே உ௱௫

அறம்பலன்-பவபலன்-சிவயோகம்,

பூசைபலன்,

காணுகின்றகர்மமதுசெய்வானாகில்
காசினியிலவனுக்காமலம்பிறக்குமாகும்
தோணவேடாவத்தைச்செய்வானாகில்
சொன்னவர்க்கமல்லாட்டஞ்சுத்தத்தார்க்காம்

ஊனைவேசியயோகஞ்செய்வாளுகி
ஓயிரதுதான்மோக்ஷமெய்துமுண்மையுண்மை
பூணைவேபூசைசெய்தால்சிவத்துக்காகும்
பூசையென்னமனங்கனிந்தால்புகழுமாச்சே, ()

அன்பிலார்ஞானக்குறி,

ஆச்சப்பாகனிவல்லோபூரணஞ்சா
லாசார மனமுருகவருமைமெத்த
காச்சப்பாநின்றதொருகன்னெஞ்சக்கும்
காயசித்திஞானசித்திகடினமாகும்,
பூச்சப்பாஞானிகடான்பூலோகத்தில்
பூரணமேமெய்யமென்பான்பூசையென்பான்
பேச்சப்பாமெத்தவுந்தான்படித்துச்சொல்வான்
பேசாமல்மனமுருகப்பெரியமாட்டே, உாகூ

உலகாதியந்தமுடிவறிதல்,

பெருமையென்னவற்றிவன்னகீர்த்தியென்ன
பேச்சென்னமகிழ்ச்சியென்னபிரிக்கவென்ன
அருமையென்னசுகமென்னகோவிற்குலமென்ன
அதீதமென்ன அரகரசிவாயமென்ன
உரிமையென்னவுறவென்னசங்கம்பமென்ன
வுலுத்தமென்னசென்னகற்பமென்ன
கருமையென்னசெம்மையென்னகலவியென்ன
காசினியில்நரகமென்னசொர்க்கமென்ன, உாய

என்னவேகுருவென்ன சீடனென்ன
இயல்பென்னவியல்புகெட்டுப்போனதென்ன
வன்னமிருஞ்சாதியென்ன நீச்சமென்ன
மாய்கையென்னகற்பமென்ன அறிவதென்ன
பொன்னென்னமனமென்னச் சீர்தானென்ன
பொல்லாததாயென்னபிறப்பதென்ன
முன்னென்னபின்னென்ன முறைதானென்ன
முடிவறிந்தோன்சிவயோகி மூர்த்தியாமே
மூர்த்தியென்று முத்தியென்று மிரண்டுஞ்சொல்வார்
முக்கியமென்பார் சிலதெல்லமூடர்மூடர்
ஆர்த்தியென்றபூரணந்தானல்லாதுண்டோ
யதிற்பிறந்ததைந்துவகை யல்லாதுண்டோ
கீர்த்தியென்றவகையறிந்து சித்தரானார்
கிலேசமில்லாஞானியென்று சிலபேரானார்
தீர்த்தியென்றரிஷியோடு முனிவரானார்
சிவயோகியென்றதிருநாமந்தானே உ௰உ

ஒடுக்கமுணர்வரிதல்,

திருவுடையநாமமென்ன சிவயோகந்தான்
செகத்திலுள்ளோர் செய்வதொன்றுஞ்செம்மை
அறிவுடையதாயினுடைஆட்டுஆட்டு (யல்ல
ஆதியென்றசிவனுட்டுஐவராட்டு
கருவுடையோரறிந்துகொள்ளுமீதல்லாமல்
காசினியோர்சொல்வதிலேகதையொன்றில்லை

மருவுடையபூவிலிட வாசம்போல
மனமுருகிப்பூரணத்தில் மாளுமாளே. உயஅ

ஆதிவஸ்து-அநாதிவஸ்து.

மாளாமலாண்டிருந்தால்யோகியாச்சு
மார்க்கமெத்தப்படிதானே மெய்ஞ்ஞானிக்கும்
ஆளாமலாண்டிருப்பா ராணுந்தாயும்
ஆதிவஸ்துஅநாதிவஸ்துரெண்டுந்தானும்
கேளாமற்கேட்டிருப்பார் நடனவோசை
கிரிகையென்றமனமங்கே புக்கிப்போகும்
வாளானவாழ்வுசிவ யோகவாழ்க்கை
மற்றதெல்லாமாய்கையென்ற வாழ்க்கையாமே ()

நூலின்தொகை வகையின்பம்.

ஆமிந்தநூற்றுப் பதினாறுக்கு
ளடக்கிவைத்த பொருளெல்லாம் வெளியாச்சொன்னேன்
ஆமிந்தவுலகத்தி லிந்நூல்கிட்டி
லுலகத்திற்சித்ததிக மூண்டாய்ப்போச்சு
தாமிந்தசூத்திரத்தைக் கெணியாதீந்தால்
தலைதெறித்துப்போகுமடாசத்தியஞ்சொன்னேன்
நாமிந்தப்படிசொன்ன யோகிக்கீய்வாய்
நலமானபூரணசூத்திரந்தான்முற்றே, உயய

அகஸ்தியர்பூரணசூத்திரம்.

முற்றிற்று.